இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
இடைநிலை, மூன்றாம்நிலை கல்வித் துறை
கல்விப்பீடம்
முதுகல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப்பரீட்சை - 2018/2019

**ESP2312/STP9812 – கல்வி சமூக தத்துவ அடிப்படைகள்**

காலம்: 03 மணித்தியாலங்கள்

நேரம்: மு.ப 09.30 –நண்பகல் 12.30 திகதி : 17.03.2019

மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

01. (i) அரசியல் சமூகமயமாக்கல் பற்றி உமது கருத்து யாது? சுருக்கமாக விளக்குக?
(06 புள்ளிகள்)

(ii) கல்விக்கும் அரசியலுக்கும் இடையிலான தொடர்பை பகுப்பாய்வு செய்க?
(10 புள்ளிகள்)

(iii) அரசியல் சமூகமயமாக்கல் முகவர்கள் மூன்றினைப் பெயரிட்டு அவற்றில் ஒன்றினைப் பற்றிய உமது நோக்குகளை விளக்குக?
(17 புள்ளிகள்)

02. (i) கல்வியின் பிரதான தொழிற்பாடுகளை இனங்காண்க? இலங்கைச் சூழலமைவுடன் தொடர்புற்ற வகையில் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றை விபரிக்குக?
(10 புள்ளிகள்)

(ii) பிள்ளைகளை வேலையுலகிற்கு தயார் செய்வது கல்வியின் குறிக்கோள்களுள் ஒன்றாகும்.பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றை விளக்குக?
(10 புள்ளிகள்)

(iii) மாணவர்களை வேலை உலகிற்கு தயார் செய்வதில் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றை இனங்காண்க? நீங்கள் இனங்கண்ட பிரச்சினைகளுள் ஒன்றைத் தீர்ப்பதற்கு உமது ஆலோசனைகளைத் தருக?
(13 புள்ளிகள்)

03. (i) குடும்பத்தின் இரண்டு வகைகளையும் பெயரிட்டு அவற்றின் பண்புகளை சுருக்கமாக ஒப்பிடுக?
(06 புள்ளிகள்)

(ii) சமூகமயமாக்கல் செயன்முறையில் கருக்குடும்பத்தின் வகிபங்கு பற்றி இலங்கை சூழலமைவில் இருந்து பொருத்தமான உதாரணங்களுடன் மதிப்பீடு செய்க?
(13 புள்ளிகள்)

(iii) உலகில் இளைஞர் சமுதாயத்தில் வன்முறைக் கலாசாரம் அதிகரித்து வருவதில் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் வகிபங்கு பற்றி பொருத்தமான உதாரணங்களுடன் விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க? (14 புள்ளிகள்)

04. (i) பின்வரும் தலைப்புக்களின் கீழ் கீழைத்தேய, மேலைத்தேய கல்வித்தத்துவங்கள் பற்றி கலந்துரையாடுக?

- கல்வியின் நோக்கங்கள்
- ஆசிரியரின் வகிபங்கு

(20 புள்ளிகள்)

(ii) கல்வி தொடர்பான பேண்தகு அபிவிருத்தி இலக்கினைப் பெயரிட்டு,அதனை சுருக்கமாக விளக்குக? (05 புள்ளிகள்)

(iii) மேற்கண்ட இலக்கினை இலங்கைச் சூழலில் அடைந்து கொள்வதில் உள்ள தடைகளை இனங்கண்டு அவ்விடர்களை நீக்குவதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக? (08 புள்ளிகள்)

05. (i) கல்வியுடன் தொடர்புபட்ட தற்காலப் பிரச்சினைகள் ஐந்தைப் (05) பட்டியலிடுக. இலங்கைச் சூழலமைவுடன் தொடர்புபடுத்தி அவற்றிலொன்றை விளக்குக? (10 புள்ளிகள்)

(ii) மாணவரிடத்தில் விழுமியங்களை விருத்தி செய்வதில் இலங்கை எதிர்நோக்கும் சவால்கள் யாவை? (10 புள்ளிகள்)

(iii) நீங்கள் மேற்கூறிய சவால்களை இழிவளவாக்குவதற்குரிய நான்கு (04) ஆலோசனைகள் தருக? (13 புள்ளிகள்)

06. (i) சமூக வகுப்பு என்ற எண்ணக்கருவினை விளக்குக? (06 புள்ளிகள்)

(ii) கல்வியுடன் தொடர்புற்ற வகையில் இலங்கையில் உள்ள தாழ் சமூக வகுப்புக்களில் உள்ள பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விபரிக்குக? (10 புள்ளிகள்)

(iii) மேலே நீர் கூறிய பிரச்சினைகள் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றினைத் தீர்ப்பதற்கு உமது ஆலோசனைகளை கூறுக. (14 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*